**SC.No**. 12/2023

**PW** 2- குனசேகரன் த/பெ. சண்முகம்

நாள். 27.06.2023

<u>மனுஅனுமதியின் பேரில் எதிரி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. கருப்பண்ண சாமி கோவிலுக்கும் என்னுடைய வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அரை கிலோமீட்டர் இருக்கும். அ.சா 1 என்னுடைய உறவினர் என்றால் இல்லை என்னுடைய மாமியார் வீட்டிற்கு எதரில் உள்ளார். மருத்துவமனையில் மருத்துவர் என்னிடம் கேட்ட போது நான் அ.சா 1ன் உறவினர் என சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. போலீஸ்சார் என்னை விசாரிக்கும் போது மண்ணரை லிருந்து மணியக்காரன் பாளையம் செல்லும சாலையில் இருந்து எந்த திசையில் சென்று கொண்டு இருந்தேன் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். போலீஸ்சார் என்னை விசாரிக்கும் போது சம்பவ சமயத்தில் நான்சம்பவத்தை தடுத்து நிருத்துவதற்காகவோ காயம் பட்ட நபரை காப்பாற்றுவதற்காகவோ முயற்சி எதுவும் செய்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம்.

2. சம்பவ சமயத்தில் சம்பவ நேரததில் நான் உண்மையிலேயே சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் அ.சா 1ன் உறவினர் என்பதால் இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சயியாக ஜோடிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. போலீஸ்சார் என்னை விசாரிக்கும் போது அ,சா 1 வீட்டிற்கு நான் தான் தகவல் சொன்னதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. தம்பிக்கு தகவல் சொன்னதாக சொல்லியுள்ளேன். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் அ.சா 1 சொல்லிக்கொடுத்தன் பேரில் என வழக்கிற்காக ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI

Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2023.06.27 19:24:17 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.